# நட்பு

**வளர்நிலை - 6**

நட்பு என்பது சிநேகம் அல்லது தோழமை எனப் பொருள்படும். வாழ்வில் நம்பிக்கைக்கும் பாதுகாப்பிற்கும் நட்பு அவசியமாகின்றது. திருக்குறளில் நட்பின் மேன்மையை திருவள்ளுவர் நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீ நட்பு, கூடா நட்பு என ஐந்து அதிகாரங்களில் திறம்பட விளக்குகிறார். நட்பு என்பது முகம் பார்த்து பழகுவதல்ல அது உள்ளம் கலந்து பழகுவது. இது திருக்குறளில் காணப்படும் குறளான

"முகநல நட்பது நட்பன்று நெஞ்சத்து

அகநல நட்பது நட்பு"

பார்க்கும் போது மனம் மகிழாமல் முகம் மட்டுமே மலரப் பழகுவது நட்பன்று. அன்பால் மனமும் மலரப் பழகுவதே நட்பு. நட்பில்லா மனிதன் என்றால் அவனொரு மனிதன் இல்லை. நட்புக்கே உயிரை தந்தால் அவனைப் போன்று புனிதன் இல்லை. நட்பு என்பது தெரியாத ஒருவரிடம் பழகி அவரைப் புரிந்து கொண்டு இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்வதோடு தக்க சமயத்தில் உதவிபுரிவதாகும். மேலும் தவறு செய்யும் பொழுது அன்புடன் இடித்துரைத்து ஒருவரை நல்வழிக்கு இட்டுச் செல்வதே நட்பாகும் .

"உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு" - என்கிறது திருக்குறள்

இதன் பொருள் யாதெனில், அணிந்திருக்கும் ஆடையானது நழுவும் போது எப்படி அவனது கைகள் உடனடியாகச் செயல்பட்டு அதனைச் சரி செய்ய உதவுகின்றனவோ அதைப்போல நண்பனுக்கு வரும் துன்பத்தைப் போக்கத் துடி துடித்துச் செயற்படுவதே நட்புக்கு இலக்கணமாகும்.

நட்பின் முக்கிய தேவையே துன்பத்தில் உதவுவது. ஆனால் தேவை உள்ள நேரத்தில் மட்டும் வரும் நண்பர்கள் சுயநலவாதிகள். எனவே நண்பர்களைத் தேர்வு செய்யும் போது இதை அனைவரும் கவனத்தில் கொள்ளவேண்டும். உண்மையான நட்பு நம் வாழ்நாள் முழுவதும் தொடரும், எனவே சிறந்த நட்பை, நண்பர்களை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுத்தால் வாழ்வு வளம் பெறும்.

நன்றி, வணக்கம்!